# செய்தி வெளியீடு

தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வுக் குழுமம் இரண்டாம் நிலை காவலர் பணியிடத்திற்கு முன்னாள் படைவீரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்டம் முழுவதும் தமிழ்நாடு சீருடைப்பணியாளர் மொத்த பணி காலியிடம் 15,664 ஆகும். அந்தப் பணியிடத்தில் 5 சதவீதம் முன்னாள் படைவீரர்/படைவீரர்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. எனவே இரண்டாம் நிலை காவலர் பணியிடத்திற்கு விண்ணப்பிக்க கீழ்க்காணும் தகுதி படைத்திருக்க வேண்டும்.

1. கல்வித்தகுதி – SSLC தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.
2. வயது – 45 வயதிற்குள் இருத்தல் வேண்டும். 01.07.1972க்கு பின்னர் பிறந்திருத்தல் வேண்டும்.
3. இதர தகுதி – படைப்பணியிலிருந்து விலகி மூன்று ஆண்டுகளுக்குள் இருத்தல் வேண்டும்.

மேற்காணும் பணியிடத்திற்கு விண்ணப்ப படிவம் கீழ்க்காணும் முகவரியில் உள்ள தலைமை தபால் நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாம். அதன் விபரம் பின்வருமாறு .

1. 143 வி. மாாக்கெட் ரோடு, சேலம்–01.
2. 82, காந்தி நகர், ஆத்தூர்
3. 179, அங்காளம்மன் கோவில் ரோடு, எடப்பாடி
4. 176–எ, ஸ்ரீராம் காம்ப்ளக்ஸ், ஆத்தூர் மெயின் ரோடு, கெங்கவல்லி
5. கிழக்கு மெயின் ரோடு, மேட்டூர்
6. தர்மபுரி மெயின் ரோடு, ஓமலூர்
7. புதிய எண்.6, தெலுங்கர் வீதி, சங்ககிரி
8. 144, போஸ்ட் ஆபிஸ் வீதி, சூரமங்கலம்
9. 118ச, கடலூர் மெயின் ரோடு, வாழப்பாடி
10. மெயின் ரோடு, ஏற்காடு.

மேற்காணும் இரண்டாம் நிலை காவலர் பணியிடத்திற்கு செல்ல விருப்பமும், தகுதியும் உள்ள முன்னாள் படைவீரர்கள் தபால் நிலையத்தில் விண்ணப்பத்தினை பெற்று பூர்த்தி செய்து, படைப்பணிச்சான்றின் நகல்களோடு விண்ணப்பிக்குமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் விபரங்களுக்கு **www.tnusrb.tn.gov.in** இணையதளத்தில் தொடர்பு கொள்ளலாம். விண்ணப்பிக்க வேண்டிய கடைசி தேதி **22.02.2017** ஆகும்.

மேற்காணும் பணியிடத்திற்கு விண்ணப்பித்த முன்னாள் படைவீரர்கள் தங்களது பெயரினை சேலம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் பதிவு செய்து கொள்ளுமாறு தெரிவிக்கப்படுகிறது. மேலும் சேலம் மாவட்ட த்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவரைச் சார்ந்தோர்களுக்கு தமிழ்நாடு சீருடைப்பணியாளர் தேர்வு வாரியம் இரண்டாம் நிலை காவலர் பணிக்கு முன்பயிற்சி வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இம்முன்பயிற்சியானது 13.02.2017 அன்று காலை 10.30 மணியளவில் சேலம் மாவட்ட முன்னாள் படைவீரர் நல அலுவலகத்தில் நடைபெறவுள்ளது. எனவே முன்னாள் படைவீரர் மற்றும் அவரைச் சார்ந்தோர்கள் இவ்வரிய வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்ளுமாறு சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் கேட்டுக் கொள்கிறார்.

மாவட்ட ஆட்சித்தலைவர், சேலம்.